# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## புனித தேவ்னிமோரி சின்னங்களின் தரிசனம்

இந்தியாவின் குஜராத்திலிருந்து கொண்டுவரப்பட்டுள்ள புத்த பெருமானின் புனித தேவ்னிமோரி சின்னங்களின் தரிசனம், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்களாலும், இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தி குஜராத் ஆளுநர் ஸ்ரீ ஆச்சார்ய தேவ்ரத் மற்றும் குஜராத் துணை முதல்வர் ஸ்ரீ ஹர்ஷ் ஷங்கவி ஆகியோராலும், கொழும்பு கங்காராமை விகாரையின் பிரதமகுரு சங்கைக்குரிய டாக்டர் கிரிந்தே அஸ்ஸாஜி தேரர் அவர்கள் முன்னிலையில் 2026 பெப்ரவரி 04ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கௌரவ டாக்டர் ஹினிதும சுனில் செனவி, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கௌரவ டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ பேராசிரியர் A.H.M.H. அபயரத்ன ஆகியோரும் இத்தருணத்தில் பிரசன்னமாகியிருந்தனர். இத்தரிசனம் பொதுமக்களின் வழிபாட்டுக்காக 2026 பெப்ரவரி 5ஆம் திகதி முதல் திறந்திருக்கும்.

2. 2025 ஏப்ரலில் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது அவரால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைவாக இந்த தரிசனம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஆழவேரூன்றி காணப்படும் ஆன்மீக மற்றும் நாகரீக உறவுகளை புனித சின்னங்களின் தரிசனம் பிரதிபலிக்கின்றது.

3. இலங்கையின் 78வது சுதந்திர தினத்திற்கு சமாந்தரமாக 2026 பெப்ரவரி 04 ஆம் திகதி இப்புனித சின்னங்கள் வருகை தந்தமை இத்தருணத்திற்கு விசேட முக்கியத்துவத்தினை வழங்குகிறது. அத்துடன் இச்சின்னங்கள் இந்தியாவுக்கு வெளியே பொதுமக்களின் வழிபாட்டுக்காக வைக்கப்படுகின்றமை இதுவே முதல் தடவையாகும். 2012 ஆம் ஆண்டில் கபிலவஸ்து சின்னங்களின் தரிசனமும், 2018 ஆம் ஆண்டில் சரணாத் சின்னங்களின் தரிசனமும் இந்தியாவால் முன்னர் இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

4. இந்தியாவின் குஜராத்தில் உள்ள தேவ்னிமோரி மிகவும் முக்கியமானதொரு பௌத்த தொல்பொருள் தளமாக உள்ளது இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது புனித அஸ்தி, ஒரு செப்பு பெட்டி மற்றும் வெள்ளி மற்றும் தங்கத்திலான மென்தகடு ஆகியவற்றுடனான பேழைகளுடனான சரீர தூபி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இந்த பேழையில் ஒன்றில் பிரம்மி எழுத்துக்களாலும்

சமஸ்கிருத எழுத்துக்களாலும் “தசபால சரீர நிலைய” என குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது புத்த பெருமானின் உடல் எச்சங்களின் இருப்பிடம் என அங்கு எழுதப்பட்டிருந்தது. இந்நிலையில் இந்தியாவில் முக்கியத்துவம் மிக்க பௌத்த தொல்பொருள் ஆய்வுகளில் இச்சின்னங்களும் ஒன்றாக திகழ்கின்றன.

5. இப்புனித சின்னங்களுடன், குஜராத் ஆளுநர் ஸ்ரீ ஆச்சார்ய தேவ்ரத் மற்றும் குஜராத் துணை முதல்வர் ஸ்ரீ ஹர்ஷ் ஷங்கவி, கலாசார அமைச்சு, தேசிய நூதன சாலை, பரோதா எம் எஸ் பல்கலைக்கழகம், சர்வதேச பௌத்த சம்மேளனம் ஆகியவற்றின் அதிகாரிகளும், துறவிகளும் விஜயம் மேற்கொண்டுள்ளனர். கொழும்பு பண்டாரநாயக்கே சர்வதேச விமான நிலையத்தில் இச்சின்னங்களை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கௌரவ டாக்டர் ஹினிதும சுனில் செனவி மற்றும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பேராசிரியர் A. H. M. H. அபயரத்ன ஆகியோர் வரவேற்றிருந்தனர்.

6. இந்த நிகழ்வுகளுடன் "புனித பிப்ரஹ்வா மீட்பு" மற்றும் "சமகால இந்தியாவில் புனித சின்னங்களும் கலாசார ஈடுபாடுகளும்" ஆகிய தலைப்புகளிலான கண்காட்சிகள், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கௌரவ டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கௌரவ டாக்டர் ஹினிதும சுனில் செனவி, மற்றும் பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ பேராசிரியர் A.H.M.H. அபயரத்ன, குஜராத் ஆளுநர் ஸ்ரீ ஆச்சார்ய தேவ்ரத் மற்றும் குஜராத் துணை முதல்வர் ஸ்ரீ ஹர்ஷ் ஷங்கவி ஆகியோரால் கங்காராமை விகாரையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

7. 2025 ஏப்ரல் விஜயத்தின்போது பிரதமர் மோடி அவர்கள் அனுராதபுரத்தில் உள்ள புனித நகர் வளாகத் திட்டத்திற்கான நன்கொடை அடிப்படையிலான அபிவிருத்தி உதவி திட்டத்தினை அறிவித்திருந்தார். 2020 ஆம் ஆண்டில் பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்ட 15 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நன்கொடை அடிப்படையிலான திட்டத்துக்கும் மேலதிகமாக இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாறான இருதரப்பு உறவுகள் மற்றும் மடாலயங்கள் மற்றும் புலமைமிக்கோர் சமூகங்கள் இடையிலான கிரமமான பரிமாற்றங்கள் ஊடாக இலங்கையுடனான நாகரீக பிணைப்புகளை மேலும் வலுவாக்குவதற்கு இந்தியா உறுதிபூண்டுள்ளது.

***

கொழும்பு
04 பெப்ரவரி 2026